546

# முல்லைக் கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

[வெள்ளிக் கிழமையில் கிழமைப் பதிப்பு]

ஆசிரியர்: இளவழகனார்

| கிளை | | தளிர் |
|---|---|---|
| 9 | துன்முகி, பங்குனி 16உ. 23உ 29-3-57, 5-4-57 | 24-5 |

9-ம் ஆண்டுக்கையொப்பம்
(14-10-56 முதல்)

உள்நாடு ரூ. 4 0 0
வெளி நாடு ரூ. 6 0 0
தனித் தாள் ரூ. 0 1 0
ஆயுள் - கையொப்பம் ரூ. 100 0 0

முகவரி:
குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ் நாடு.

3 - MAY 1957
MADRAS

## வழிபாட்டு வகுப்பும் மாணவரும்

கூட்டமாக அமர்ந்து ஆண்டவனை வழிபடுவதன் ஆற்றல் அளப்பரியது. தனியாகச் செய்ய வியலாத எதனையும் கூட்டமாகச் சேர்ந்து எளிதில் செய்கிறோம். வழிபாட்டுக் கூட்டத்தின் அருமையைச் சிறிய மாணவர்க்குத் தெளிவுபடுத்தத் தேவையில்லை. விருப்பத்தோடும் பள்ளிவிதிகளுக்குக் கீழ்ப்படிந்தும் அவர்கள் அத்தகைய கூட்டங்களுக்கு வந்து கலந்து கொண்டால் நாளடைவில் அவர்கள் தாமே தெளிவு பெறுவர். மாணவரிற் பலர் அம்மாதிரி வருவதில்லை. வரும் பிறரையும் எள்ளி நகையாடிக் கெடுக்கின்றனர், தொடக்கத்தில் வெறுப்புணர்ச்சி காட்டும் மாணவர்பலர் கூட்டமாக வழிபடப் பழகிய பின் அதில் நம்பிக்கை மிகுவதை நாம் அறிந்திருக்கிறோம். இவ்வழக்கம் வயதின் மூத்த மனிதர்க்கும் புதிதன்று. எவர்க்கும் பழகப் பழகத்தான் வழிபாட்டின் அருமை தெரியும். மாதாகோயில், மசூதி இந்துக்கள் கோயில்களுக்குச் செல்பவர் எல்லாரும் வீணரல்லர். அவர்களுக்கெல்லாம் இக் கூட்ட வழிபாடு, இன்றியமையாத நாட்கடன்களை ஒத்தது. தினம் நீராடல் உணவுண்ணல் போன்று வாழ்வின் இன்றியமையாத தேவையாக உள்ளது. இவ்வழிபாடுகள் வெறும் மூடநம்பிக்கை காரணமாக ஏற்படுவதென்று ஒரு சிலரால் எளிதில் ஒதுக்கி விடக் கூடியன அல்ல. எத்தனையோ ஊழிகளையும் தாக்குதல்களையும் தாண்டி இந் நாளில் முதன்மை வகிக்கும் இவ்வழிபாடுகள் இனியும் நீடூழி வாழும்.

—மகாத்மா காந்தியடிகள்

'என்கடன் பணி செய்து கிடப்பதே''



யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''
—புறநானூறு.

முல்லைக் கொடி

| கிளை | துன்முகி, மாசி | தளிர் |
|---|---|---|
| 9 | 29-3-57 | 23 |


# வளர்க மக்களாட்சி!

புயல் ஓய்ந்து விட்டது. நாடெங்கும் நிலைகலக்கிக் குழப்பம் விளைவித்து வந்த பயங்கரக் கடுஞ்சூறைக்காற்று பன்னெடுங் காதத்துக்கப்பால் பறந்தோடி விட்டது மீண்டும் நாட்டில் அமைதி நிலவுகிறது. இனிமை தவழ்கிறது.

இந்தியத்துணைக் கண்டத்தில் இத்திங்களின் தொடக்கத்தில் தொடங்கிய பொதுத்தேர்தல் ஆரவாரங்களும் குழப்பங்களும் பெரும்பாலும் ஓய்ந்து மீண்டும் பழைய அமைதி தவழும் இன்றைய நிலையைத்தான் புயலுக்குப்பின் அமைதி என்று குறிப்பிடப்பட்டது.

எங்கோ சிற்சில இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் தேர்தல் முடிந்துவிட்டது, நாட்டில் எதிர்பார்த்திருந்தபடி 'காங்கிரசுக்குப் பேரளவான வெற்றி கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

சென்ற ஐந்தாண்டுகளில் காங்கிரஸ் கட்சியின் பேரால் பதவி பெற்று வாழ்ந்தோரிற் பெரும்பான்மையோர் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதுவும் மகிழ்ச்சிக்குரியதுதான்.

வெற்றிபெற்ற அனைவருமே அண்ணல் காந்தியாரின் அடிச்சுவட்டைப்பின்பற்றி நாட்டு நலமே தம் நலமாகப் பேணி எம் கடன் பணி செய்துகிடப்பதே என்று வாழ்ந்த பெருமக்கள் என்று எண்ணிவிடலாமா?

இல்லை; இத்தகைய உண்மை காணும் தேர்வு நடத்தினால் ஒருசிலர்தாம் வெற்றி பெறுவர். ஆனால் இன்றைய தேர்தல் வெற்றிகள் எதனைக் குறிப்பிடுகின்றன?

நம் நாட்டு மக்கள், தேர்தலில் நிற்போரைக் காட்டினும், அவர் துணையாகக் கொண்டு நின்ற கட்சியையே மதித்துத் தம் வாக்குரிமைகளை வழங்கினர் என்பதையே இன்றைய தேர்தல் முடிவுகள் திட்டவட்டமாக எடுத்தியம்புகின்றன.

நாட்டு விடுதலைப் போராட்டத்திற்காகத் தம் உடல் பொருள் ஆவி அனைத்தும் தியாகம் செய்த அண்ணல் காந்தியாரின் அரிய பெரிய சேவைகளை நம் நாடே மறந்துவிடினும் வெளியுலகம் இன்னும் எண்ணி எண்ணிக் கருத்துருகிக் கண்ணீர் சிந்துவதை மறுக்க இயலுமா?

எழுபதாண்டுகளாக எத்தனையோ ஆயிரக்கணக்கான உயிர்த்தியாகங்களும் உணர்ச்சிப்போராட்டங்களும் நடத்தி நாட்டுரிமை வாங்கித்தந்த காங்கிரஸ் கட்சியின் கண்ணியமான சேவைகளைத்தாம் மக்கள் மறந்துவிட முடியுமா?

அத்தகைய அரிய பெரிய காங்கிரஸ்கட்சி வாழவேண்டும் என்று நாம் எண்ணுவது இயல்புதான்.

தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் தி. மு. கழகம் போன்ற வேறு இயக்கங்களும்; நாட்டு நலன்களிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்துவரும் சிந்தனைச் செல்வர் பல்லோரை நம் மக்களாட்சிக்கு உதவியிருப்பது, நம்மகிழ்ச்சியை வளர்ப்பதோடு நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கெல்லாம் நம்பிக்கை ஊட்டுகின்றது.

தேர்தல்பிரச்சினை ஒருவாறு முடிந்துவிட்டது. இனிச் செய்ய வேண்டுவது யாது?

வெற்றி பெற்றிருக்கும் சான்றோர் பெருமக்கள் நாட்டின் உரிமை தேடித்தந்த உத்தமர் காந்தியண்ணலார் காட்டிய வழியில் நாட்டில் மக்களாட்சியை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும்.

மக்களாட்சி வளரத்தகுந்த வாய்ப்புக்கள் ஏனைய நாடுகளுக்கில்லாத அளவில் நம் நாட்டுக்கு வாய்ந்துள்ளது. ஆட்சியின் தலைமைப் பொறுப்பேற்று நிற்கும் நம் நாட்டு முடிசூடா மன்னர் திரு. ஜவஹர்லால் நேரு போன்ற நல்லறிவாளர்கள் மக்களாட்சியை மாநிலம் போற்றி வளர்க்கும் பெரும்பணியில் கருத்தூன்றி வருகின்றனர்.

'ஐந்தாண்டுகளுக்கு முன் நட்ட குடியரசு' என்னும் இளஞ்செடி இன்று வன்மை வாய்ந்த பெருமரமாகக் காட்சியளிக்கின்றது என்று பண்டித ஜவஹர்லால் புதுடில்லியில் லோகசபையில் 28ந்தேதியில் கூறியிருப்பது மக்களாட்சியின் எதிர்காலச் செழுமைக்கும் நம்பிக்கையளிக்கிறது.

(7-ம் பாக்கம் பார்க்க)

## சமயப் பகுதி — அருள் வலிமைக்கு

# உள்ளொளிர் இறைவன் உடலிடங் கொண்டான்

(வே. ந. நாராயணன்)

உள்ளமோ தேர்வை எண்ணிப் படிக்க வேண்டும் எனக் கருதுகின்றது. உடலோ (பொறிகளையுணர்த்தும்) நிழற்படக்காட்சி காணவும், விளையாடவும், அற்ப ஆனந்தத்தைக் கிளரும் சினிமாப் பாடல்களைக் கேட்கவும், பலரோடு கூடி வெட்டிப் பேச்சுப் பேசவும், ஊர் சுற்றவுமான ஆசைச் சிறுமைகளை விரும்புகின்றது. இங்கேதான், உடலுக்கும் உள்ளத்திற்கும் போராட்டம் எழுகின்றது. அதனால் துன்பம் அனுபவிக்கவேண்டி வருகின்றது. எனவே உடல் போகும் வழி உள்ளமோ, உள்ளம் போகும் வழி உடலோ இயைந்து பிரிவின்றிச் செல்லுமானால்தான் இன்பம். உள்ளம் விரும்பும் ஒரு பொருள், பொருளை அறியும் கண்ணாலும், ஒலியையுணரும் காதாலும், சுவையை யுணரும் நாவாலும், மணத்தை நுகரும் மூக்காலும் பரிசத்தை யுணரும் உடலாலும் விரும்பப்பட வேண்டும். (இதுவே, ஏகாக்கிரசித்தத்திற்கு, உள்ள ஒருமைப் பாட்டுணர்விற்கு வேண்டப் படுவதாகும்) இவ்வாறு, உள்ளத்தில் உறையும் பொருளோ எண்ணமோ, உடல் கூறுகளாகிய ஐம்பொறிகளிலும் அதனதன் இயல்புக்கேற்ப — செயல்படுந் தன்மைக்கேற்ப இடம்பெற வேண்டும்.

உள்ளம் விரும்புவதைப் புலன்களும் விரும்புமானால் எது இன்னல்? துனபம் பிறக்க வழியேது? உடலும் உள்ளமும் ஒன்றாக எல்லோருக்கும் இயைந்து விடுவதில்லை. பல நேரங்களில் இரண்டிற்கும் போராட்டம் எழுவதுண்டு. இவ்வாறான உள்ள உடல் போராட்டம், திருநாவுக்கரசு நாயனார்போன்றவர்கட்குக் கூட ஆரம்பகாலங்களில்நிகழ்ந்ததாகத் தெரியவருகின்றது.

"மெய்யுளே விளக்கை யேற்றி
வேண்டளவுயரத் தூண்டி
உய்வதோர் உபாயம்பற்றி
யுகக்கிறேனுகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர்
அவர்களோ வலியர் சாலச்
செய்வதொன் றறிய மாட்டேன்
திருப்புகலூரனீரே"

என்கிறார், திருநாவுக்கரசர்.

"ஐவர் கொண்டிங் காட்ட வாடி ஆழ்குழிப்பட் டழுந்துவேன்" எனவுரைப்பர் சுந்தரர்.

அருணகிரி நாதர், ஓரவொட்டார் ஒன்றை உன்ன வொட்டார் மலரிட்டுனது தாள், சரவொட்டார் ஐவர் செய்வதென் யான். எனப் பாடுகின்றார். மணிவாசகரும், முன்னர்,

மலங்கப் புலனைந்தும்
வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால்
விமலாவுனக்குக்
கலந்த வன்பாகிக்
கசிந் துள்ளுருகும்
நலந்தானிலாத்தன்

என்றுரைத் துள்ளார்.

இவ்வாறு, அறிவு வழிச் செல்லும் உள்ளத்திற்கு மாறுபட்டு நின்று, உடற் புலன்கள் அல்லல் தந்ததைப் பலருங் கூறியுள்ளனர்.

முதலில், உள்ள எண்ணத்திற்கு, நல் விருப்பிற்கு, உடல் ஒத்துவராததைக் கூறிய மணிவாசகர், உள்ள உடல்போராட்டத்திற்குத் தானும் ஆட்பட்டதாகக் கூறிய மணிவாசகர், பின்னர், தனக்கு உள்ளமும், உடலுமாகிய இரண்டும் ஒத்த தன்மையில் இயங்க வாரம்பித்து விட்டன எனக் கூறுகின்றார். உள்ளமும் உடலும் ஒன்றாக எப்போதும் யார்க்கும் இயைந்து விடுவதில்லை. எப்போதும் ஒன்றை யொன்று அணைத்தே இயங்கிவிடுவதில்லை, பல நேரங்களில் இரண்டிற்கும் போராட்டம் எழுவதுண்டு. எனினும். யாருக்கும் கிட்டாத அத்தகைய உள்ள, உடல் உறவு தனக்குக் கிட்டியதற்குக் காரணம், இறைவனின் பேரருளே, பெருங்கருணையே என்கிறார். அவர் சொல்லக் கேளுங்கள்.

'எந்த விதத்தாலும் யாதொரு குறைவு மின்றி நிறைவாகவுள்ளவனே! குற்றம் சிறிது மில்லாத இன்சுவை அமுதம் போன்றவனே! எல்லையிலா இளமையான ஒளிக்குன்றை ஒத்தவனே! வேதமாகவும் வேதத்தின் உட்பொருளாகவும் வந்து எனது மனத்திடையே பிணைந்திணைந்து நிலைபெற்ற அரசனே! அணையற்ற வெள்ளம்போல் எனது சிந்தையில் துணையெனப் பாயும் பெருந்துறைப் பெருமானே! இறைவனே! நீ என் உடலையும் இடமாகக் கொண்டாய். இனி யான் உன்னிடம் என்ன இரக்க வேண்டியுள்ளது? உள்ளத்தில் பிணைந்ததுபோல் உடலிலும் பிணைந்து விட்டாய்! ஐக்கியமாகி விட்டாய்.

உள்ளம் பண்புடன் இருந்தாலும். அவ்வுள்ளம், பொறிகளைத் தன்னகத்தே கொண்ட உடலால் பாதிக்கக் கூடும். எனது உள்ளத்திற்கு, பண்பிற்கு 'மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்புலன்களாகிய 'மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்' ஐம்புலன்களும் துன்பந்தரக் கூடுமன்றோ?

(வரும்)

## கலைப் பகுதி — உள வலிமைக்கு

# விமர்சனக் கலை

"இளம் பூரணன்"

(1)

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாட்டில் பழைய காலத்தில் மக்கள் வாழ்ந்து வந்தனர். நாட்டில் எங்கும் அன்பு நிலவியது. எல்லோரும் நல்வாழ்வு வாழவேண்டும், எல்லோரும் இன்புற்று இருத்தல் வேண்டும் என்ற நல்லகுறிக்கோள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இடங்கொண்டுவாழ்ந்தது. தாமுண்டு தம்வாழ்வுண்டு என்ற அற்பத் தன்மை வாய்ந்த குறுகிய நோக்கம் அக்கால மாந்தர்க்கு அறவே இருந்ததில்லை. உலகமாகிய பெருவீட்டில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ஒரு குடிப் பிறந்த மக்களாகவே அன்புடன் கலந்து வாழ்ந்தனர். பிறர் குறை தம் குறையாக எண்ணி வருந்தினர். பிறர் புகழ் தம் புகழாக எண்ணி இன்புற்றனர்.

மக்கள் வாழ்வில் பின்பற்ற வேண்டிய நல்லொழுக்க முறைகள் இன்னவை என்றும் ஒதுக்க வேண்டிய தீமைகள் இன்னவை என்றும் சான்றோர்கள் அறநூல்கள் வாயிலாக அறுதியிட்டு உலகுக்கு அருளிச் சென்றார்கள். மக்களும் அறநூல்களில் சொல்லியபடி நல்லனவற்றைப் பின்பற்றியும் தீயனவற்றை அஞ்சி யொதுக்கியும் செம்மையான வாழ்வில் திகழ்ந்தார்கள். தாம் திகழ்ந்ததோடு மட்டு மல்லாமல் பிறர் தம் வாழ்வில் சிறிது பிறழ்ந்து செல்வது கண்ட போதும் பக்குவமான முறையில் அவர் தம் குறைகளை எடுத்துக் காட்டித் திருத்திச் செவ்விய நெறியில் புகுத்துவதே தம் தலையாய கடன் என்று ஒவ்வொருவரும் கருதினார்கள். அவ்வாறு குறைகளை எடுத்துக் காட்டியது, பிறழ்ந்து செல்பவர் திருந்தி வாழ்வதற்கு இடம் வகுத்தது. அவரும் அங்ஙனமே ஏனையோரைத் திருத்துவதற்கும் வழிகோலியது.

நாட்டில் சான்றோர் பெருகப் பெருக நாட்டின் நல்வாழ்வு சிறந்தோங்கும் என்ற கருத்து அந்நாட்களில் இருந்தது. 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோ'ர்பலர் நாட்டில் அன்பு பெருக அறம் பெருக இன்பம் நிலவச் செயல்களில் ஈடுபட்டனர். தக்கன இவை தகாதன இவை என்று விளக்கி மக்களுக்கு உறுதுணையாக இருந்து செந்நெறியில் அவர்களைச் செலுத்தினர். மக்களும் சான்றோர்கள் நெஞ்சுவப்பக் குற்றமற்ற தூய வாழ்வு நடத்தினர். அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன் ஆகிய ஐங்குரவர் ஆணை மறுக்காமல் அவர் நெஞ்சம் இன்புறும்படி ஒவ்வொருவரும் கடனாற்றினர்.

பொதுவாகக் கூறுமிடத்து, அக்காலத்திற் பெரியோர், மக்கள் அனைவரும் குற்றமற்ற தூய வாழ்வு நடத்தவேண்டும், நாட்டில்தீமை தலை காட்டாமல் அன்பும் அறமும் ஆட்சி செய்ய வேண்டும் என்ற நல்ல குறிக் கோளுடன் வாழ்ந்தனர் என்றும், அக்குறிக்கோள் ஏதுவாகப் பிறர் குற்றங் கண்ட போது தக்க வகைகளில் அக்குற்றங் கடிந்து நல்வாழ்விற் செலுத்தினர் என்றும் உணர்கின்றோம்.

குற்றம் கடியும்சான்றோர்க்கு இவர் தமக்கு வேண்டியவர் இவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு இருந்ததில்லை. காய்தல் உவத்தல் ஆகிய இருவகைக் குணனும் அவர் உள்ளத்தில் இடம் பெற்றதில்லை நடுநிலை திறம்பா நிலையில்இருந்தபடியே பிறர்தம் குற்றங்களை அருளோடு களைதல் அவர் பண்பாக இருந்தது.

மக்கள் வாழ்வில், சான்றோர் மேற்கொண்ட இத்தகைய குற்றங்கடிந்து குணம் பெருக்கும் பண்பு நாளடைவில் மக்களியற்றும் நூல்களுக்கும் தேவைப் பட்டது. நூல்களில் நல்லன கண்டபோது பாராட்டுவதோடு மட்டுமின்றி குற்றங்கள் கண்டபோது அவற்றைத் துணிவாக எடுத்துக்கூறுதலும் தம் கடமை என்று கற்றறிந்த சான்றோர் கருதினர். தம் நடுநிலைமை திறம்பாத ஆராய்ச்சிப் பண்புடன் நூல்களின் சிறப்பியல்புகளை விளக்கமாக மொழிந்தும் குற்றங்களை எடுத்துரைத்துத் திருத்துதற்கு வழிவகுத்தும் நூலாசிரியன் சிந்தனையை வளர்த்துதவினர். இத்தகைய செயல்தான் 'விமர்சனம்' என்ற பெயரால் இன்று நாட்டில் வளர்ந்து வருகிறது.

ஆகவே 'விமர்சனம்' என்ற சொல்லுக்குக் குற்றம் களைந்து குணம் பெருக்கும் பண்பு என்று பொருள் கொள்ளலாம். மக்கள் வாழ்வுக்கு விமர்சனம் முதன்மையாகத் தேவைப் பட்டதுபோல வாழ்வுக்கு வழி காட்டும் இலக்கியங்களுக்கும் விமர்சனம் மிக மிகத் தேவை என்பதில் ஐயமில்லை. என்பதனை மாந்தர் நன்குணர்ந்து போற்றலாயினர்.

[தொடரும்]

## ஆர்வலர், பட்டியின் சென்ற வாரத் தொடர்ச்சி

ஆ. வ - எ. 639
திரு. டி. ஆர் ரங்கசாமிமுதலியார் அவர்கள்
நெல்லிகுப்பம் இண்டஸ்டிரீஸ்
அங்கப்பநாய்க்கன் தெரு,
சென்னை - 1

ஆ. வ - எ. 640
திரு. சதாசிவ ரெட்டியார் அவர்கள்
நெல்லிகுப்பம் இண்டஸ்டிரீஸ்,
அங்கப்பநாய்க்கன் தெரு,
சென்னை-1.

ஆ. வ - எ. 641
திரு. டி சாரதாம்பாள் அவர்கள்
கார்ப்பரேஷன் உயர் ஆரம்பப்பாடசாலை
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2

ஆ. வ - எ. 642
திரு. ஜி. ஆர். சுப்பிரமணியம் அவர்கள்
12, கிழக்குமாதா தெரு,
மைலாப்பூர், சென்னை-4

ஆ. வ - எ, 643
திரு. எம். ரங்கசாமி அவர்கள்
33, பள்ளித்தெரு, சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2.

ஆ. வ எ. 644
திரு. மு. கண்ணன் அவர்கள்
80, சாமிநாயக்கன்தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2

ஆ. வ - எ. 645
திரு. யு. சரவணபவன் அவர்கள்
11 அருணாசலநாயக்கன் தெரு
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2..

ஆ. வ - எ. 646
திரு. டி. குழந்தைவேலு அவர்கள்
கேஷ் ஆபீஸ், தென்னிந்திய ரயில்வே,
சென்னை 3

ஆ வ - எ 647
திரு. கே. வேணுகோபால் அவர்கள்
7, சாமி ஆசாரி தெரு, புதுப்பாக்கம்
சென்னை-14.

ஆ. வ - எ. 648
திரு. க. வேதகிரி அவர்கள்
69, நைநியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

ஆ. வ - எ, 649
திரு டி. ஆர் ராவ். அவர்கள்
10எ, ரெயில்வே, ஸ்டேஷன்ரோடு
கோடம்பாக்கம் சென்னை-

ஆ. வ - எ. 650
திரு. ஆர். வி. நாகராஜன் அவர்கள்
7, சி. ஐ. டி. காலனி, மௌபிரேஸ் ரோடு,
சென்னை-

ஆ. வ எ. 651
திரு. அ. முத்தையப்பிள்ளை அவர்கள்
சற்சங்கம், கண்டாச்சிபுரம் (வயா)
விழுப்புரம். ஆர். எம் எஸ்

ஆ. வ - எ. 652
திரு. ப. தணிகாசல முதலியார் அவர்கள்
1, கந்தப்பசெட்டித் தெரு,
கொத்தவால்சாவடி, சென்னை-

ஆ. வ - எ. 653
திரு. எஸ். சந்திரசேகரன் அவர்கள்
21, கொல்லவார் அக்ரகாரம்ரோடு
சென்னை-21.

ஆ. - வ எ. 654
திரு. கே. ராமசுவாமிஅவர்கள்
54, மருதி தெரு, சைதாப்பேட்டை,
சென்னை-15.

ஆ. வ - எ. 655
திரு. அ. சிதம்பரம் அவர்கள்
1-1, வடக்குமாட வீதி, நுங்கம்பாக்கம்,
சென்னை-6.

ஆ. வ - எ. 656
திரு. செ. செங்கல்வராயன் அவர்கள்
9, தெற்குமாட வீதி, நுங்கம்பாக்கம்,
சென்னை-6

ஆ வ- எ. 657
திரு. தியாகராசன் அவர்கள்
பெருமாள்கோயில் தெரு,
சைதாப்பேட்டை சென்னை-15

ஆ வ- எ, 658
திருமதி. தியாகராசன் அவர்கள்
பெருமாள்கோயில் தெரு
சைதாப்பேட்டை, சென்னை. 15

ஆ வ- எ, 659
திரு. ஆப்ர ஹாம் தனராஜ் அவர்கள்
39. தாகர் தெரு,
சென்னை7

ஆ. வ - எ.660
திரு. க. சு. மோகனகிருஷ்ணன்
அவர்கள்
27, வேதவிநாயகர் ரோடு,
சென்னை-7

ஆ, வ-எ. 661
ஆ. பொன்னுசாமி செட்டியார்
அவர்கள்
11, சந்திரப்பமுதலிதெரு. சென்னை.

ஆ வ- எ 662
திரு. வி. வேணுகோபால் பிள்ளை
அவர்கள்
333 தங்கசாலை தெரு,
சென்னை-1

ஆ. வ எ,663
திரு. ஏகாம்பர செட்டியார்
அவர்கள்
46-1 ஏரிகரைரோடு; மேற்கு மாம்பலம்
சென்னை

ஆ. வ - எ. 664
திரு. எஸ். ஆர். சின்னசாமி
செட்டியார் அவர்கள்
பண்டி அண்டு ஆயில்மில்ஸ்; பார்க்குரோடு.
ஈரோடு (தமிழ்நாடு)

ஆ வ - எ. 665
திரு கே. இராமேஷ்ராவ் அவர்கள்
141 அரண்மனைத்தெரு, லலிதா நகர்
மைலாப்பூர் சென்னை

ஆ. வ - எ. 666
திரு. இரத்தின நாயகர் அவர்கள்
(பங்காருநாயுடுமகன்) நசரத்பேட்டை
பூந்த மல்லி

ஆ. வ - எ. 667
திரு. என். பால கிருஷ்ணன்
அவர்கள்
1-3 பெருமாள்கோயில்தெரு
அரும்பாக்ம் சென்னை 29

ஆ, வ - எ. 663
திரு. டி.வரதராஜ முதலியார்
அவர்கள்
23 அபிராமபுரம் முதல்தெரு
தேனும்பேட்டை சென்னை 18

ஆ. வ - எ. 669
திரு. பி. வி. வெங்கடேஸ்வரராவ் அவர்கள்
136 புரசவாக்கம் ஹைரோடு
சென்னை-7

ஆ. வ - எ. 670
திரு. தி. பா. இராச மாணிக்கம் அவர்கள்
7 குறவன்குளம்சந்து
குளை, சென்னை7

ஆ. வ - எ 671
திரு. என். ஆறுமுகம் அவர்கள்
13 கண்ணப்ப முதலி தெரு
சென்னை 12

ஆ. வ - எ. 672
திரு. டி. பேரம்பலம் அவர்கள்
10 சுப்பிரமணிய முதலி தெரு
சென்னை 1

ஆ. வ - எ. 673
திரு. வித்துவான். நா. தண்டபாணி அவர்கள்
30 முருகன்கோவில் தெரு
புதுவண்டிப்பாளையம்
திருப்பாதிரிப்புலியூர்
கடலூர், என். டி.

ஆ. வ - எ. 674
திரு. வித்துவான். சிவலிங்கனுர் விரிவுரையாளர், அவர்கள்
தமிழ்க்கல்லூரி, மைலம்

ஆ. வ - எ. 675
திரு எம். தேசப்பன் அவர்கள்
36 கார்ப்பரேஷன் மாடல் லைன்
பனைமரத் தொட்டி, சென்னை-13

ஆ. வ - எ. 676
திரு. செயலாளர் அவர்கள்
திரு. வி. க. இலக்கியமன்றம்,
3-13 சிரங்கம்மாள் தெரு
சென்னை 21

ஆ. - வ. எ. 677
திரு. தலைவர் அவர்கள்
திருக்குறள் மன்றம்
நெ 28 பிடாரியார்கோவில் தெரு
சென்னை-1

ஆ. வ - எ. 678
திரு. வி. டி. செல்வராஜ் அவர்கள்
188 டி. எச். ரோட், சென்னை-21

ஆ. வ - எ. 679
திரு. ஜி. பழனி அவர்கள்
10 எ பிள்ளையார்கோயில் தெரு
கந்தப்பிள்ளை சாவடி
கோடம்பாக்கம், சென்னை-1

ஆ. வ - எ. 680
திரு. பு. தி. நாகலிங்கம் அவர்கள்
173 ஆர்க்காடுரோட், கோடம்பாக்கம்,
சென்னை -17

ஆ. வ - எ. 681
திரு, சிவபாதம் அவர்கள்
46 வெள்ளாமுத்தெரு, அமைந்தகரை
சென்னை-29

. வ - எ. 682
திரு. கே. என். சீனிவாசன் அவர்கள்
23 நார்மணி தோட்டத்தெரு, சென்னை.

ஆ. வ - எ. 683
திரு. கே. பரமசிவம் அவர்கள்
2-8 சாமிபிள்ளை தெரு குளை சென்னை-7

ஆ. வ - எ. 684
திரு. கே. சி. முனுசாமிப் பிள்ளை அவர்கள்
காரியதரிசி,
பொதுச்செயலாளர் சங்கம்,
புலியூர் 34 பாரத்வாஜீஸ்வரர் காலனி
சென்னை-24

ஆ. வ - எ. 685
திரு ச. மா. கோவிந்தராசலு அவர்கள்
23 ஐயாப்பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி
சென்னை-5

ஆ. வ - எ. 686
திரு வி. நாகராசன் அவர்கள்
5, ஜெயராம் செட்டித்தெரு,
சைதாப்பேட்டை, சென்னை

ஆ. வ - எ. 687
திரு. எம். ஆர். துரை சாமி அவர்கள்
325 பைகிராப்ட்ஸ்ரோட், மதராஸ்-14

ஆ. வ - எ. 688
திரு. எம். மாயாண்டி நாடார் அவர்கள்
24 கல்மண்டபம்ரோடு, சென்னை-21

ஆ. வ - எ. 689
திரு. ஜி. மாயாண்டி அவர்கள்
36-37 பேசின்ரோடு, சென்னை-

ஆ. வ - எ. 690
திரு. முகமத் ஈசாப் அவர்கள்
ரங்கூன்டிம்பர்ஷாப், பேசின்பிரிட்ஜ்ரோடு,
சென்னை-21

ஆ. வ - எ. 691
திரு. கே. ஆறுமுகம் அவர்கள்
2-2451 தங்கசாலைதெரு, சென்னை

ஆ. வ - எ. 692
திரு ஜி. சக்திவேல் அவர்கள்
8. பாலு முதலிதெரு, சென்னை-21

ஆ. வ - எ. 693
திரு. விஜயராகவன் அவர்கள்
19 எ, முனியப்ப முதலிதெரு, சென்னை 21

ஆ. வ - எ. 694
திரு. கே. இராமதாஸ் அவர்கள்
1. சுப்பிராயபிள்ளைதெரு, சென்னை-1

ஆ. வ - எ. 695
திரு. பி. கண்ணப்ப முதலியார் அவர்கள்
13 முத்தையா முதலி தெரு, சென்னை-21

ஆ. வ - எ. 696
திரு. பி. எம். செல்வராசன் அவர்கள்
13. முத்தையாமுதலிதெரு, சென்னை-21

# முல்லைக் கொடி "நேயர்கள்"

வ - எ. 1001
திரு என். அருணாசலம் அவர்கள்
இராமசாமிபார்க், இராசிபுரம்,
சேலம் மாவட்டம்.

வ. - எ. 1002
திரு ஆர். சிவசிதம்பரம்பிள்ளை
அவர்கள்
அவாரணி, சிக்கல் அஞ்சல்,
நாகப்பட்டினம் தாலுக்கா,

வ. - எ. 1003
திரு ம. அமிர்தலிங்கம் அவர்கள்
அரசினர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி,
திரிபுவனம், திருவிடை மருதூர்.

வ. - எ. 1004
திரு வ. இராமசாமி அவர்கள்
புதுப்பாளையம் கிராமம்,
புதுப்பாளையம் அஞ்சல்,,
(வயா) காஞ்சிபுரம்.

வ. - எ. 1005
திரு எம். ஆர். கண்ணன் அவர்கள்
107, அண்ணுபிள்ளைதெரு,
சென்னை-1

வ. - எ. 1006
திரு ஏ. எஸ் சுப்பிரமணி அவர்கள்
சௌத்ஈஸ்ட் ஏஷியாடிக் கார்ப்பரேஷன்,
19, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை-1

வ. - எ. 1251
திரு கோ. சிவஞானம் அவர்கள்
மாளிகைத்திடல்,
திருக்கருகாவூர் அஞ்சல்.
பாபநாசம் வழி,
தஞ்சை மாவட்டம்.

வ - எ. 1252
திரு என். டி. சுந்தரவடிவேலு
அவர்கள்
மாநிலக் கல்வித் துறைத்தலைவர்,
80-சி, ஷெனாய்நகர்.
சென்னை.

வ - எ. 1253
திரு மதுராந்தகம் வட்டப்
பள்ளிக் கண்காணிப்பாளர்,
அவர்கள்
மதுராந்தகம்.

வ. - எ. 1254
திரு மகாசந்நிதானம் அவர்கள்
திருவாடுதுறை மடம்.
நரசிங்கன்பேட்டைவழி,
தஞ்சை மாவட்டம்.

வ. - எ. 1255
திரு மகாசந்நிதானம் அவர்கள்
தருமபுர ஆதீனம்,
மாயூரம் வழி.
தஞ்சை மாவட்டம்

வ - எ. 1256
திரு தலைவர் அவர்கள்
காசி மடம், திருப்பனந்தாள்,
தஞ்சை மாவட்டம்,

வ-எ 1257
திரு கே கோதண்டபாணி அவர்கள்
88, வெங்கிடேச புரம்.
அயன்புரம், சென்னை-23

வ. - எ. 1258
திரு இராவ்பகதூர் சி. எம்.
இராமச்சந்திரஞ்செட்டியார் அவர்கள்
கோவை நிலையம்,
இராமநாதபுரம்,
கோயம்புத்தூர்.

வ. - எ. 1259
திரு கே. முத்துமல்லா ரெட்டியார் அவர்கள்
பெருநிலக் கிழார்,
புலம்பாக்கம்,
மதுராந்தகம் தாலுக்கா.

வ - எ. 1260
திரு எம். இ. கணபதி முதலியார்
பெரிய நத்தம் அஞ்சல்,
செங்கற்பட்டு,

வ. - எ. 1261
திரு தணிகைமணி வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள்
292, லிங்கி செட்டித் தெரு,
சென்னை - 1

வ - எ. 1262
திரு மேனேஜர் அவர்கள்
சின்ன மலேஸ்வரர் தேவஸ்தானம்,
தேவராஜ முதலி தெரு,
சென்னை 3

வ. எ. 1263
திரு செயலாளர் அவர்கள்
தமிழ்க்கல்லூரிக்கழகம்,
பேரூர், கோவை மாவட்டம்.

வ. - எ. 1264
திரு ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள்
வடலூர்.
கடலூர். (O. T.) வழி

வ. எ. -1265
திரு அ. முத்தையன் அவர்கள்
சற்சங்கம்,
கண்டாச்சிபுரம் அஞ்சல்,
முகையூர் வழி

வ - எ 1266
திரு தேவராஜ முதலியார் அவர்கள்
29, வேதவிநாயகர் கோயில் தெரு,
வேப்பேரி, சென்னை-7

வ. - எ. 1267
திரு என். முனுசாமி அவர்கள்
பர்மா ஆர்ட்ஸ்டுடியோ,
1-29, ஆதியப்ப நாயக்கன் தெரு
சென்னை - 1

வ. - எ. 1268
திரு தவயோக சோமசுந்தர தேசிகர் அவர்கள்
திருஞான சம்பந்தர் மடம்
மதுரை.

வ. - எ- 1269
திரு இராமலிங்கரெட்டியார் அவர்கள்
காட்டரண்பாக்கம்,
புளிச்சப்பள்ளம் அஞ்சல்
(வழி) புதுவை

வ எ. 1270
திரு செங்கற்பட்டு மாவட்டக்கல்வி அதிகாரி அவர்கள்
சைதாப்பேட்டை,
சென்னை-15.

வ. - எ. 1271
திரு சு. ப. ராமசாமி அவர்கள்
காய், கனி வியாபாரம்,
அம்மாப் பேட்டை,
தஞ்சை மாவட்டம்.

வ - எ, 1272
திரு ஏ. ஆர். பார்த்தசாரதி நாயிடு அவர்கள்
396, தங்கசாலைத்தெரு,
சென்னை-1.

வ - எ. 1273
திரு தாசில்தார் அவர்கள்
மதுராந்தகம்.

வ - எ 1274
திரு மயிலை சிவமுத்து அவர்கள்
17, இரத்தினவேலு முதலி தெரு,
சென்னை-1.

வ - எ. 1275
திரு பா. சுந்தரேசன் அவர்கள்
37, நாணயக்காரச் செட்டித்தெரு.
கும்பகோணம்,
தஞ்சைமாவட்டம்.

வ - எ. 1276
திரு இராமசம்பந்த மூர்த்தி முதலியார் அவர்கள்
மஞ்சக் கொல்லை,
நாகப்பட்டினம் அஞ்சல்,

வ - எ. 1277
திரு உத்தண்டராமப்பிள்ளை அவர்கள்
கமிஷனர். H. R. E. AND
C. E. டிபார்ட்மெண்ட்
சென்னை-2.

வ - எ. 1278
திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்
திருவண்ணாமலை ஆதீனம்,
குன்றக்குடி காரைக்குடி (வழி)

வ - எ. 1279
திரு ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள்
175-A, லாயட்ஸ்ரோடு,
இராயப்பேட்டை
சென்னை-14

வ. எ. 1280
திரு சிவஞானபாலைய அடிகளார் அவர்கள்
மயிலம், திண்டிவனம் (வழி)

வ - எ. 1281
திரு மயிலை தெய்வசிகாமணி பி. எ. அவர்கள்
310-C, திருவல்லிக்கேணி ஐரோடு.
சென்னை-5.

வ - எ. 1282
திரு ரெவின்யூ இனிஸ்பெக்டர் அவர்கள்
மதுராந்தகம்.

வ - எ. 1283
திரு சுகாதார இலாகா அதிகாரி அவர்கள்
மதுராந்தகம்.

வ - எ. 1284
திரு கே. ஸி. நாயிடு அவர்கள்
வட்டார அபிவிருத்தி அதிகாரி
மதுராந்தகம்

வ - எ. 1285
திரு கந்தசாமி அவர்கள்
20, தட்டாரத்தெரு,
மதுராந்தகம்.

வ - எ. 1286
திரு அய்யாதுரை அவர்கள்
மின்சார இலாககுபர்வைசர்
குருக்கள் தெரு,
கடப்பேரி, மதுராந்தகம்.

வ - எ. 1287
திரு பொதுச்செயலாளர் அவர்கள்
குருகுலம் சென்னைக் கிளை நிலையம்
1-22, வெங்கடாசலமுதலிதெரு
சென்னை-3

வ. எ. 1288
திரு பி. லக்ஷிமிகாந்த முதலியார்
அவர்கள்
டெபுடி ரிஜிஸ்தார்,
கோவாப்பரேட்டிவ் சௌஸைட்டி
21 நெல்லுக்காரத் தெரு,
பெரியகாஞ்சிபுரம்.

வ - எ. 1289
திரு ராஜிசெட்டியார் அவர்கள்
14 A, மாம்பலம் ஐரோடு
சென்னை-17

வ - எ. 1290
திரு டாக்டர். அனந்தராமன்
எம். பி. பி. எஸ். அவர்கள்
28, மூக்காத்தாள் தெரு
புரசை, சென்னை-7.

வ- எ. 1291
திரு பால சுந்தரம் அவர்கள்
ஐ. ஏ. எஸ்.
கமிஷனர். கார்ப்பரேஷன்,
ரிப்பன் பில்டிங்ஸ்,
சென்னை-3

வ- எ 1292
திரு எம். கிருஷ்ண ரெட்டியார்
அவர்கள்
காட்டரண்பாக்கம்
புளிச்சப்பள்ளம் அஞ்சல், (வழி) புதுவை.

வ- எ. 1293
திரு கே. எஸ். இராமமூர்த்தி
ரெட்டியார் அவர்கள்
காட்டரண் பாக்கம், புளிச்சப்பள்ளம் அஞ்சல
[வழி] புதுவை

வ - எ 1294
திரு எஸ். சிவராம் ரெட்டியார்
அவர்கள்
கொங்கம் பேட், ராம்பாக்கம் அஞ்சல்.
வழி, ஊளவனூர்

வ-எ. 1295
திரு இறைபணியாளர் அவர்கள்
திருவெண்காட்டீஸ்வரர் கோயில்,
மதுராந்தகம்

வ- எ 1296
திரு டி, வி, கிருஷ்ணன் அவர்கள்
டி. டி. இ
தென்னிந்திய ரயில்வே, எழும்பூர்,
சென்னை.

வ எ, 1297
திரு பி. செல்வநாத செட்டியார்
அவர்கள்
221 நேதாஜிரோடு.
சென்னை-1

வ - எ. 1298
திரு ஜி இ முத்திருளாண்டி அவர்கள்
ஐ. ஏ. எஸ்.
4, மார்ஷால்ரோடு,
எழும்பூர், சென்னை-8

வ - எ. 1299
திரு இ நம்பியப்பன் பி. எ. அவர்கள்
12 எ மாரிசெட்டித் தெரு,
மந்தைவெளி, சென்னை-4

வ - எ. 1300
திரு பி சுந்தரேசஐயர் அவர்கள்
"கே" செக்ஷன், ஹரிஜன நல இலாகா
அலுவலகம், நுங்கம் பாக்கம், சென்னை-6

வ - எ. 1301
திரு ஏ வி. சோமசுந்தரம் அவர்கள்
செங்கல்பட்டு மாவட்ட சுகாதார
இலாகா அதிகாரி, சைதாப்பேட்டை,
சென்னை-15

வ - எ. 1302
திரு கோவிந்தசாமி அவர்கள்
தலைமை குமாஸ்தா, செங்கல்பட்டு
மாவட்ட சுகாதார இலாகா அலுவலகம்
சைதாப்பேட்டை, சென்னை-15

மொழிப் பகுதி – அறிவுவலிமைக்கு [முன்தொடர்ச்சி]

# துன்பம் ஏன்?

(மணி)

வீடு தோறும் சண்டை, தெரு தோறும் சண்டை, ஊர் தோறும் சண்டை, தேசத்திற்குத் தேசம் சண்டை.

அழித்தலே அதன் முடிவான எண்ணம். தான் வாழ வேண்டும் என்ற ஆசையே அதன் அடிப்படையான எண்ணம்.

ஒருவன் ஆற்றும் செயல் அது அவனுக்கு நன்மையோ அல்லது தீமையோ கொடுக்கின்றது. அச்செயல் சிறியதாயின் சிறிய அளவாகவும், பெரியதாயின் பெரிய அளவாகவும், பயன் பெறுகின்றான். செய்யும் செயலுக்குப் பயனுண்டு அல்லவா: பயன்பெறத்தானே செயல் இயற்றுகின்றான். செயல் ஆற்றுகின்ற பொழுது சிறப்பாகத் தாய் தந்தையரின் குணம் அமையும். எனவே ஒருவனுடைய முன்னேற்றத்திற்கும், மற்றும்கீழ்நிலை அடையவும் அவனுடைய தாய் தந்தையரே முதலாவதாகப் பொறுப்பாளிகளாவர் இரண்டாவதாகத்தான் சூழ்நிலையைக் குறிப்பிட முடியும்.

'அன்னையும் பிதாவும் முன்னறி 'தெய்வம்' என்பது ஔவையின் திருவாக்கு. பிறந்த குழந்தை முதலிலே தாயை அறிகின்றது. பின் அவளால் தந்தையை அறிகின்றது. குழந்தையை வளர்ப்பவர்கள் அக் குழந்தையின் தாயும், தந்தையுமேயாவர். குழந்தை முதலில் அறிவது பெற்றோர்களை. குழந்தை வளர்வதும் அப் பெற்றோர்களால். எனவே குழந்தையின் நலன் பெற்றோர்களிடம்தான் உள்ளது. பெற்றோர்களின் குணப்படிதான் குழந்தை இருக்கும் என்பதில் யாருக்குமே ஐயமிராது. எனவே தாயும், தந்தையும் முதலில் அறிகின்ற தெய்வங்களாவர்.

தாயும் தந்தையும் குழந்தைக்குத் தெய்வமென்றால் அவர்களிடம் தெய்வத்திற்கு உள்ள அருங்குணங்கள் அனைத்தும் இருக்க வேண்டுவது மிகவும் அவசியமாகுமல்லவா.

பெற்றோர்கள் ஒழுங்கின்றி இருப்பார்களானால் அவர்கள் குழந்தை எந்நிலையிலிருக்கும் என்பதைக் கூற வேண்டிய அவசியமேயில்லை. திருடன் மகன் பக்காத்திருடனாகவும், குடியன் மகன் பெருங்குடியனாகவும் தானே இருப்பன். எனவே பெற்றோர்கள் ஒழுக்கத்திலே சிறந்து விளங்குதல் வேண்டும். சிறந்த ஒழுக்கம் அற்ற பெற்றோர்களின் மக்கள் சிறந்துவாழார். வீணே துன்பத்தில் உழல்வர்.

இன்று அப்படிப்பட்ட பெற்றோர்களைக் காண முடிவதில்லை. பொய்யும், களவும், கொலையும், மற்றும் பிற தீய செயல்களும் உடையவராகவே காணப்படுகின்றனர். இவர்கள் துன்புறுவது மன்றித் தங்கள் வயிற்றிலே பிறக்கும் மக்களையும் துன்புறுத்துகின்றனர். மக்கள் வாழ விருப்பமுடையவர்கள் அவர்கள். ஆனால் தம்மைத் துன்புறுத்திக் கொள்வது மன்றி அறியாமை காரணமாக மக்களையும் துன்புறுத்தி விடுகின்றனர்.

எனவே வாழும் மக்களிடையே வறுமை அகலுவதில்லை. செய்யும் செயல் தீமையாக இருப்பின் தீயன தானே வந்து சேரும்.

கணியன் பூங்குன்றனார் இரண்டாவது அடியிலே கூறுகின்றார் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்று. உனக்கு வேண்டிய ஆக்கமான நல்லவைகளும், உன்னையே அழிக்கும் கேடும் பிறர் கொடுத்து வருவதில்லை. அது நீயே பெறுவது: நீ செய்யும் செயலிலிருந்தே பெறுவது என்கிறார்.

(வரும்)

(எத்தனையோ நூற்றாண்டுகள் ஆகியும் இன்னும் எங்கள் தமிழான்றோர் சொற்களை நினைத்தால் உள்ளம் புத்துணர்ச்சி பெற்று ஓங்குகிறது)

# காலமே……

சி. நாராயணசாமி

'காலமே! கன்னிப் பெண்ணே! கணமும் நில்லாக் காரிகையே! நீ ஏன் நில்லாமல்ஓடிக்கொண்டேயிருக்கிறாய். எங்கே ஓடுகிறாய்? யாரைத்தேடி ஓடுகிறாய்? கன்று 'அம்மா' என்று கத்திக் கொண்டு தன் தாயைத் தேடி ஓடுகிறது. ஆறு 'சல சல'வென ஓசை கொண்டு தன் அன்பன் கடலரசனைத்தேடி ஓடுகிறது. ஆனால் நீ யாருக்காக நில்லாமல் ஓடிக் கொண்டேயிருக்கிறாய். சொல்லமாட்டாயா? உனக்கு நிற்கமுடியவில்லை என்பது எனக்குத் தெரியும். நான் உன்னுடனேயே ஓடிவருகிறேன். நில், நில், இல்லெனில் சொல். சொல், சொல்லிக் கொண்டே ஓடு. நான் எவ்வளவு வருந்தி வேண்டுகிறேன்! மௌனமாகச் செல்கிறாயே! என்னால் உன்னுடன் வரமுடியவில்லையே!

'ஆணவம் கொண்ட காலப் பெண்ணே இரக்கமெனும் பண்பிலா அரக்கியே! உனக்கேன் இத்தனை வன்மம்? முதலும் முடிவும் அற்ற நாம் அற்பாயுள் படைத்த மனிதனிடமா பேசுவது என்று கருதுகிறாயா? கொடியவளே! நீ செய்த கோடி கோடித் தவறுகளை நான் மறக்கவில்லை. எங்கள்பரம்பரைக்கு நீ செய்திருக்கும் கொடுமைகள் எவ்வளவு என்று கணக்கெடுக்க முடியாது. அறிவே உருவான வள்ளுவனை அழித்தாய். ஆனால் அவன் செய்த திருக்குறளை அழிக்க முடிந்ததா உன்னால்? தன் மானமே உருவான தமிழ்ப் புலவர்களை அழித்தாய். ஆனால் அவர்கள் செய்த பாவினங்களிலுள்ள மான உணர்ச்சியை அழிக்க முடிந்ததா உன்னால்? கோல்கோடிய பாண்டியனை அழித்தாய். அவன் செய்த நீதி முறையை அழிக்கமுடிந்ததா உன்னால்? கற்பே உருவான அற்புதக் கண்ணகியை அழித்தாய். அவள் கற்பால் பெற்ற புகழை, அப்புகழைப் பாடிய இளங்கோவின் அற்புதக் காவியமாம் 'சிலம்புச் செல்வத்தைச் சிதைக்க முடிந்ததா உன்னால்? முடியவில்லை. அன்று காவியம் பாடிய கம்பனைக் காணமுடியவில்லை. இன்று அவன் செய்த காவியத்தைக் காண்கிறோம். அன்று கனகவிசயர் மீது கல் சுமத்திய செங்குட்டுவனைக் காணமுடியவில்லை இன்று அவன் வீரத்தின் சிறப்பினைப் பாடி மகிழக் கிடக்கும் பாவைக் காண்கிறோம். மணிவாசகரைப் பார்த்ததில்லை. ஆனால் மணிவாசகத்தைப் பாடி மனமுருகுகிறோம். இராமலிங்கரை, அருணகிரியாரைக் காணவில்லை. ஆனால், அவர்கள் வாழ்வின் உண்மைகளை இன்றும் எடுத்துப் பேசுகிறோம். மனதால் நினைந்து நினைந்து உருகுகிறோம்.

'பேதைப் பெண்ணே! நீ எங்கள் உடலை அழிப்பாய். உள்ளத்தை அழிக்கமாட்டாய். அறிவை அழிக்கமுடியாது உன்னால். அன்பைக் கொல்லமுடியாது உன்னால். எத்தனையோ நூற்றாண்டுகளாகியும் இன்றும் எங்கள் தமிழான்றோர்களை நினைத்தால் உள்ளம் புத்துணர்ச்சி பெற்று, உவகைமேலோங்க்க் கற்பனைக் கடலிலே நாங்கள் நீந்துவதைத் தடுக்க முடியுமா? உன்னால்முடியாது

'அபாரசக்தி உள்ளவள். என்ற ஆணவத்தினால் அசைந்தாடிக் கொண்டு அலட்சியப்படுத்திச் செல்கிறாயே: உன் வாழ்வு எங்கள் கையில் வரும் நாள் தொலைவிலில்லை· எப்படி என்று கேட்கிறாயா? குரங்கு மனிதனாகி அறிவு பெற்றிருக்கிறதே அந்த அறிவு இப்போது நீண்டிருக்கிறது. வானத்தையும் ஊடுருவுகிறது. அதற்குமேலும் நீளுமானால் நீ வாழ மாட்டாய். சொன்னேன், இனியாவது திருந்து. திருந்தமாட்டாயா? உன் போக்கு மாறாதா? கொடியவளே!

# இன் சுவை

வளமலி உலகில் வாழ்ந்த சான்றோர்
உளமலி சிறப்பால் உவந்தின் சுவைதனை
இறைவன் படைப்பாம் இயற்கை யெழிலில்
குறைவற நீண்ட கோட்டின் வளத்திலும்
திங்கள் ஞாயிறு தீயுடன் நீரிலும்
எங்கும் பரந்துள எண்ண ரும் வெளியிலும்
இன்முக இறைவன் இனிதென இசையும்
மன்பதைத் தொண்டொடு மன்னுயிர் அன்பிலும்
மனையறம் கொள்வது மற்றவர்க் கீவதே
வினையெனக் கொண்ட வியன்மதி நலத்தால்
அமைத்தோள் மகளிர் ஆடவர் அறத்தொடு
அமைந்த வாழ்க்கை யாற்றல் திருவிலும்
குழலும் யாழும் குறைபட் டொதுங்கும்
மழலைக் குழவி மலர்க்கண் ணழகிலும்
கீரர் முதலோர் கெழுமிய தமிழால்
வீரப் புலவோர் வியந்து போற்றும்
உணர்வைக் கிளரும் ஒண்பொருள் செறிந்த
இணர்ப்பூங் கொத்தென இயற்றிய பலநூல்
தேனெனப் பாலெனத் தீஞ்சுவைத் திறமென
வான்புகழ் மலிந்த வண்டமிழ்க் கலையிலும்
பிறங்கி நின்றதோர் பெருமைய தறிந்தே
அறங்கொள் தூயோ ராயின ராதலின்
இன்சுவை ஈதென இறைஞ்சி
நன்னெறி தழுவுதல் நம்மனோர் கடனே.

* * * * *

2–ம் பக்கம் தொடர்ச்சி

மக்களாட்சி என்றும் இனிதாகவே நடந்து செல்லும் என்று எதிர்ப்பார்க்க முடியாது. எத்தனையோ புதிய புதிய பிரச்சினைகள் அவ்வப்போது கிளைத் தெழக்கூடும், இன்னும் காஷ்மீரக் குழப்பம் கோவாப்பிரச்சினை போன்றவை எதிரிட்டிருப்பது கண்கூடு.

இன்னல் கோடி எதிர்ப்படினும் அவைசட்டாகச்சிந்தனை குழம்பாமல் மக்களாட்சிவளர்ச்சியை மாநிலம் போற்றவளர்ப்பதற்குரிய வழிகளை அனைவரும் சிந்தித்துச் செயலாற்றுவோம். வளர்க மக்களாட்சி.

சி து க

* * *

## மாணவர்க்கு:

கல்வியின் தரத்துக்கேற்ப உங்கள் ஒழுக்கமும்சிறப்படைய வேண்டும்; உங்கள் எண்ணங்களும் செயல்களும் உங்கள் கருத்தின் ஆணைவழி நடக்கவில்லையானல் நீங்கள் படித்தறிந்த 'வோட்ஸ் ஒர்த்' சேக்குவீயரால் என்ன பயன். யாவும் வீணே.

* * * *

முற்றிலுமே ஒழுக்கக்கேடான சமூக வழக்கங்களைத் தெளிய உதவ வில்லையாயின் அத்தகைய கல்வியால் ஆகும் பலன் தான்யாது?

* * * * *

நம் நாட்டு மாணவர்கள் எந்தவிதமான கவலைகளும் இடம்பெறாத உள்ளத்தோடு வாழவேண்டியவர்கள். இயல்புக்கு மாறாக இன்று அவர்கள் உள்ளங்களில் சிக்கல்களும் கவலைகளும் இடம்பெறுகின்றன. இஃ தொழிய வேண்டும். ஆசிரியர் சொல்வன வற்றைக் கேட்டல் சிந்தித்தல் உணர்தல் என்பனவே அவர்தம் குறிக்கோளாக இருத்தல் வேண்டும் கேட்பனவற்றில் கொள்வன இவை தள்ளுவன இவை என்பவற்றைப் பகுத்தறிவது போதுமானது.

* * * *

மாணவர்கள் தம் தனியாற்றலைத் துணை கொண்டு செயல் புரிக! அவர் தம் விருப்பத்துக் கெதிராகச் செயல் புரிக! உந்தும் ஒவ்வொரு செயலையும் துணிந்து எதிர்க்கும் சக்தி பெறுக! அங்ஙனமே அவர்தம் விருப்பத்துக் கெதிராக மனம் பெறச் செய்யும் சக்திகளையும் எதிர்த் தொழிக்க முற்படுக!

அண்ணல் காந்தியார்.

**Phone. 55034 Tel. Enkayam**

**கைத்தறி ஆடைகளில்**

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்




## பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53. கிடங்குத் தெரு. சென்னை.

# பதினேழாம் நூற்றாண்டு

மேற்கத்திய நாட்டோடு உண்டான தொடர்புகாரண மாகப் பதினேழாம் நூற்றாண்டில் நம் தமிழகத்தில் உரை நடை நூல்கள் விரிவடைந்தன. குமரகுருபரர், சிவப்பிரகாசர் போன்ற தமிழ்ப் புலவோரும் பல உரையாசிரியர்களும், இலக்கணப் பேராசிரியர்களும் இந்நூற்றாண்டில்தான் தோன்றினர். இந்நூற்றாண்டின் இறுதியிற்றான் 'தேம்பாவணி' ஆசிரியர் பெஸ்கியும் சீறாப்புரான ஆசிரியர் உமறுப்புலவரும் நாட்டில் தமிழொளி பரப்பினர். கிருத்தவ பாதிரிமார்கள்பலர் உரை நடை இலக்கியத்தைப் பெற்றும் வளர்த்தனர். பெஸ்கியின் பரமார்த்த குருகதை உரைநடை இலக்கியம் நாட்டில் பிறப்பதற்கே வழி வகுத்தது. அதற்குப் பின்னர்தான் சிவஞான சுவாமிகளும் அருணாசலக் கவிராயரும் தோன்றினர், பள்ளு குரவஞ்சிகளும் செழித்தன. பதினேழாம் நூற்றாண்டின் உரை நடை முயற்சி பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பேரளவாகச் செழித்தது.

தெ. பொ மீனாட்சி சுந்தரனார்

(ஆவடி காங்கிரஸ் மலரில்)

"குருகுலப் பற்பொடி"

குருகுல இல்லத்திலுள்ள மாணவர்களாலேயே செய்யப் பெறுகிறது.

இதன் ஆக்கம் ஏழைப் பிள்ளைகளுக்கே சேர்வதால் இதனை ஆதரிப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

குருகுலப் பற்பொடி உயர்தரமானது.

பல் கூச்சம் சீழ் வருதல்
பல் தேய்வு செந்நீர் வருதல்
பல ஆட்டம் வாய் நாற்றம்

மற்றும் பல் தொடர்பான எல்லா வகை நோய்களையும் போக்கி, ஈறுகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ள உதவும்.

தமிழ் மருத்துவ முறைப்படி அரிய மூலிகைகள், வேர்வகைகள், மரப்பட்டைகள் சேர்த்துக் காலத்திற் கேற்றவாறு நுட்பமுறையில் செய்யப் பெற்றது.

ஒரு பை விலை 1 அணா

கோ. உலகநாதன்,
செய்கையாளர்:
குருகுலக் கைத்தொழில் நிலையம்
மதுராந்தகம் (அஞ்சல்)
செங்கற்பட்டு மாவட்டம்.

* * * *

## குருகுலச் செய்தி:

### ஆசிரியர் விரிவுரைகள்

(நடக்க இருப்பன)

குனம்பேடு:

6-4-57 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு "திருஞான சம்பந்தர்" விரிவுரை.

சென்னை:

7-4-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்குச் சென்னை சென்ன மல்லிகேஸ்வரர் கோயிலில், 'பெரிய புராணம்' விரிவுரை.

### மணித் திரள்

காம விருப்பத்தை வென்று உயர்வதே மக்கட் பிறவியின் சிறந்த குறிக்கோளாக இருத்தல் வேண்டும். காமத்தை வெல்லாத எவனும் தன்னை வென்றவன் ஆக முடியாது

நான் மேற்கத்திய பழக்க வழக்கங்கள் பலவற்றை விரும்புவதில்லை. ஆனால் சில, என் உள்ளத்தை முழுவதுங் கவர்ந்துவிட்டதையும் என்னால் மறுக்க இயலாது.

—காந்தியார்

### ஆர்வலர் சேர்க்கை

ஆண்டுக் காணிக்கை ரூ 5-0-0 செலுத்திக் குருகுலத்தில் ஆர்வலராகச் சேர்ந்துள்ளார் பட்டி. இவர்களுக்கு ஓராண்டுக்கு முல்லைக் கொடி தொடர்ந்து இலவசமாக அனுப்பிவைக்கப் பெறும்.

| | |
|---|---|
| முன்வரவு | 855 |
| சென்னை | ரூ |
| திரு. கே. இராமேஷ்ராவ் | 5 |
| திரு. இரத்தினநாயகர் | 5 |
| திரு. என். பாலகிருஷ்ணன் | 5 |
| திரு. டி. வரதராஜலு | 5 |
| திரு. பி. வி. வெங்கடேஸ்வரராவ் | 5 |
| திரு. தி. பா. இராசமாணிக்கம் | 5 |
| திரு. என். ஆறுமுகம் | 5 |
| திரு. டி. போம்பலம் | 5 |
| திரு. எம். தேசப்பன் | 5 |
| திரு. செயலாளர் (திரு. வி. க. இலக்கியமன்றம்) | 5 |
| திரு. தலைவர். (திருக்குறள் மன்றம்) | 5 |
| திரு. டி. செல்வராஜ் | 5 |
| திரு. ஜி. பழநி | 5 |
| திரு. தி. நாகலிங்கம் | 5 |
| திரு. சிவபாதம் | 5 |
| திரு. கே. என். சீநிவாசன் | 5 |
| திரு. கே. பரமசிவம் | 5 |
| திரு. கே. சி. முனுசாமிப்பிள்ளை | 5 |
| கடலூர் | |
| திரு. வித்வான். நா. தண்டபாணி | 5 |
| மைலம் | |
| திரு. வித்வான். சிவலிங்கனார். விரிவுரையாளர் | 5 |
| ஆக | ரூ 955 |